1995 ஏப்ரல் 24]

இயங்க வேண்டுமென்ற சூளுரையோடு நடவடிக்கை மேற்கொண்டது மாண்புமிகு புரட்சித்தலைவியின் முனைப்பான நடவடிக்கைகளால் தான் என்பதால் இந்த ஆலையின் பணிகளை விரைவில் துவக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் நிதி மற்றும் மறு அமைப்பு மன்றத்தில் பின்னி நிறுவனத்தின் மறுமலர்ச்சிக்காக ஒரு வரைவு திட்டத்தை தயாரிக்கவும், செயல்படுத்தவும் பின்னி நிறுவனம் விண்ணப்பித்திருந்தது. அதற்கு மேற்கண்ட மன்றம் பின்னி நிறுவனத்தின் மறுமலர்ச்சி திட்டம் ஒன்றுக்கு அனுமதி அளித்தது. ஆனால், மேற்கண்ட திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கருதினாலும், உயர் நீதிமன்றத்திலே பின்னி தொழிலாளிகள் வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கின் காரணமாக அந்த இடத்தில் பின்னி நிறுவனத்தால் எந்தப் பணியையும் செய்ய இயலவில்லை. தொழிலாளர்கள் போட்ட அந்த வழக்கு 26-8-1994 -லே தான் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆகவே, இப்போது தான் அதற்குரிய நடவடிக்கையை பின்னி நிறுவனம் எடுக்க முடிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 415, டாக்டர் சு. மணிமேகலை, இருக்கையில் இல்லை.

வினா எண் 416, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

416—

இராசிபுரம் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

*** 33211**—*திருமதி. க. பழனியம்மாள்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

சேலம் மாவட்டம், இராசிபுரம் நகரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது அரசின் பரிசிலனையில் இல்லை.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் நகரிலுள்ள இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்துவதற்காக விண்ணப்பம் முறையாக அனுப்பப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அதற்கான தொகையும் கட்டுப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியை மேம்படுத்துவதற்காக அந்த நகரத்திலே உள்ள லயன்ஸ் கிளப்பும்கூட தேவையான வகுப்பறைகளை எல்லாம் முதலிலே கட்டிக் கொடுத்திருக்கிறது. எனவே, எல்லா வசதிகளையும் அங்கே ஏற்படுத்திவிட்டு இதை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக காத்துக்கொண்டிருக்கின்றோம். அங்கு படிக்கின்ற மாணவர்களுக்கு மேல்நிலை வகுப்பில் சேர்வதற்கு வாய்ப்பு இல்லாத நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, அதைக் கருத்தில்கொண்டு வருகின்ற கல்வியாண்டில் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96 ஆம் கல்வி ஆண்டில் இந்தப் பள்ளியை மேம்படுத்த வேண்டுமென்ற கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு வந்துள்ளது. இந்தக் கருத்துரு உயர்நிலைக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசால் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் கல்வி மாவட்டத்திலே பேரலல் மீடியம் இருக்கின்ற ஒரே அரசு உயர்நிலைபள்ளி ராசிபுரத்திலே இருக்கின்ற இந்த உயர்நிலைப்பள்ளிதான். அங்கே இங்கிலிஷ் மீடியத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கும், சுற்றுப்புறங்களில் உள்ள மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் மேல்நிலைக் கல்விக்கு இடம் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே முன்னுரிமை அடிப்படையிலே அரசு இதைக் கருத்திலே கொண்டு, வருகிற கல்வி ஆண்டில் இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர அமைச்சரவர்கள் உறுதி கூறுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உடனடியாக உறுதி கூறமுடியாது. உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்றவாறு, விதிமுறைகளின் அடிப்படையில், அரசு இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 417, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.